## முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி – திருவாரூர் மாவட்டம்

ந.க.எண். 483 / 2012/அ1 நாள் : 12.06.2013.

# சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சி நிதி 2012 – 2013

## 1998ம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் தமிழ்நாடு சட்டம் 43/1998) விதிமுறைகளின் படி அறிவிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் 2012– 2013ம் ஆண்டு சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சி நிதியின் கீழ் கீழ்க்காணும் வேலைகளைச் செய்து முடிக்க தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முத்துப்பேட்டை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 26.06.2013–ம் தேதி புதன்க்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு முத்துப்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் ஒரே உறை முறையில், மூடி முத்திரையிடப்பட்டு, உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 26.06.2013–ம் தேதி புதன்க்கிழமையன்று பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **http://www.tenders.tn.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதள முகவரிகளில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது 25.06.2013–ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்குள் பட்டியலில் கண்டுள்ள தொகைக்கான வங்கி வரைவோலை அல்லது வங்கி கொடு ஆணை சமர்ப்பித்து இப்பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை கணினி மூலமே பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து மின்னணு பரிவர்த்தனை மூலம் கையொப்பமிட்டு கணினி வழியாகவே அனுப்பலாம். அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்களை முத்துப்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் நேரிடையாக ஒப்படைக்கலாம்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சால்வன்சி தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## வேலைப் பட்டியல்

| வரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சம்) | முன் வைப்பு தொகை (1%) ரூ. | ஷெட்யூல் கிரயம் ரூ. | பணிமுடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பேட்டை ரோடு, எஸ்.வி.தெரு, நொண்டியம்பலங்காடு, அய்யனார் கோவில் தெருவில் 1.947 கி.மீட்டரில் தார் சாலை அமைத்தல். . (வார்டு எண்–10, 11) | 50.00 | 50000/- | 9000+360 | 2 மாதங்கள் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் ஒப்பந்தக்காரர்கள் எந்த துறையை சார்ந்த ஒப்பந்தக்காரராக இருந்தாலும் குறைந்தது Class I க்கு குறையாமல் உள்ள ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக பணி உத்திரவு வழங்கும் முன்பு பேரூராட்சியில் உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.

2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய வங்கி வரைவோலை அல்லது வங்கி கொடு ஆணை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3. ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு அறிவிப்பு வழங்கப்பட்ட பின்பு முன்வைப்புத்தொகை 1% செலுத்த வேண்டும்.

4. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது.

5. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்தவேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், முத்துப்பேட்டை பேரூராட்சி என்ற முகவரியிட்டு, கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.

6. ஒப்பந்தக்காரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விலக்கிக்கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.

7. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு விதிமுறைகளின்படி வேலை உத்தரவு வழங்கப்படும்.

8. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ. 50/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித் தர வேண்டும்.

9. வேலை தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் மதிப்பீட்டில் 0.1% வேலை முடியும் காலம் வரை அபராதம் விதிக்கப்படும்.

10. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு, பின்வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித் தொகையும், நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்ததாரர்களின் வைப்புத் தொகைகளும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும்.

11. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாக கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12. சாலைப்பணிகளில் பிளாஸ்டிக் கழிவுகள் மதிப்பீட்டில் கண்டுள்ளவாறு பயன்படுத்த வேண்டும்.

13. சாலைப்பணிக்காக சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

14. டெண்டர் கிடைக்கப்பெறாத ஒப்பந்தக்காரருடைய டேவணித்தொகை விண்ணப்பத்தின் பேரில் காசோலை மூலம் திருப்பிக் கொடுக்கப்படும்.

15. வேலையை முடித்த பின்னர் இறுதி பட்டியலில் கண்டுள்ளவாறு தொகைகள் பிடித்தம் செய்யப்பட்டு மீதித் தொகையை மட்டும் ஒப்பந்தக்காரருக்கு பட்டுவாடா செய்யப்படும்.

| வ எண் | விபரம் | பிடித்தம் செய்யும் அளவு |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்புத்தொகை | 2.5% |
| 2 | வருமான வரித்தொகைப் பிடித்தம் | 2% |
| 3 | வருமானமேல்வரி | 12% |
| 4 | விற்பனைவரி | 2% |
| 5 | வரிமேல்வரி | 12% |

16. பணி நடைபெற்றுக்கொண்டிக்கும் போது ஒப்பந்தப்புள்ளிக்கு பகுதி பட்டியல் வழங்கும் போது 5% தொகை வைப்புத்தொகையாக ஒவ்வொரு பகுதி பட்டியலுக்கும் பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும்.

17. முழு வேலையும் முடிந்து இறுதி பட்டியல் வழங்கும் தொகையில் பணியின் மொத்த மதிப்பீட்டில் 2.5% பழுதுபார்ப்பு தொகையாக வைப்புத்தொகை பிடித்தம் செய்யப்படும். இத்தொகை சாலை பணிக்கு 1 வருடம் டேவணிக் கணக்கில் பிடித்தம் செய்து வைக்கப்படும்.

18. பிடித்தம் செய்யப்பட்ட டேவணித் தொகை தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத் தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

19. வேலைகள் சம்பந்தமான அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

20. ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்ததாரரால் தவிர்க்கப்படல் வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் போது, இத்திட்டச் சாலைப்பணி முடிக்கப்பட்டவுடன், மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு சாலைப் பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததரரே தனது சொந்தச் செலவில் சீரமைக்க வேண்டும்.

2. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடித்த பின்னரும் மூன்று நிலைகளில் புகைப்படம் எடுக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தைக் காட்டும்படியாக இருத்தல் வேண்டும்.

3. பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தினையும், அரசு தொழில் நுட்பக்கல்லூரியில் ஆய்வு செய்து, அதன் விபரத்தினை ஆவணப்படுத்தப்ட வேண்டும்.

4. ஒப்பந்தக்காரர்கள், ஒரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். டேவணித் தொகை முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் தகுதிச் சான்றிதழ் (Class - II) விற்பனை வரிச் சான்றிதழ், ஒப்பந்த படிவம் (Price Bid) போன்ற விவரங்களை ஒரே உறையில் வைத்து, மூடி முத்திரையிட்டு உறையின் மேல் வேலையின் பெயர், மதிப்பீடு, ஒப்பந்தப்புள்ளி நாள், ஒப்பந்ததாரர் பெயர் போன்ற விபரங்கள் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

5. ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்துவதில் 5 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் என்பதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

6. ஒப்பந்ததார்கள் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் தற்போது கொடுத்துள்ள பணி போன்ற பணிகளில் மொத்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டில் 50% ஒரே வேலையாக எடுத்து பணி முடித்தமைக்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

7. ஒப்பந்ததாரர்கள் கடந்த 3 ஆண்டுகளில் தொடர்ச்சியாக செயல்படுத்திய வேலைகளுக்கான மதிப்பு தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டில் 50% சதவீதத்திற்கு அதிகமாக உள்ளது என்பதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

8. தார்சாலை அமைக்கும் பணிக்கான இயந்திரம் (Paver Machine) ஒப்பந்தக்காரரே வைத்திருந்தால் பதிவு புத்தக்கத்தின் ( Rc Book) நகல் சான்றுறுதி அலுவலர் (Notary public) சான்று நகல் அல்லது வேறு உரிமையாளரிடம் வாடகைக்கு எடுத்தால் இருவரும் ஒப்பந்தம் செய்துகொண்டு ( ரூ. 20 மதிப்புள்ள முத்திரைத்தாளில் ) 2 சாட்சிகள் கையொப்பத்துடன் சான்றுறுதி அலுவலர் சான்றுடன் ஆவணங்களில் இணைக்க வேண்டும்.

9. தார் கலவை இயந்திரம் ( Mixing Plant) ஒப்பந்தக்காரரே வைத்திருந்தாலோ வேறு நபரிடமிருந்து வாடகைக்கு எடுத்தாலோ பணி நடைபெறும் இடத்தில் 120 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் தார் கலவை சப்ளை செய்வதாக ஒப்பந்தம் செய்து ஆவணங்களுடன் இணைக்க வேண்டும்.

| Sl No | Name of the Equipment | Quantity |
|---|---|---|
| | **For B.T Roads** | |
| 1 | Central Mixing Plant | 1 No. |
| 2 | Paver Machine | 1 No. |
| 3 | Tipper Lorry | 4 Nos. |
| 4 | Vibratory Roller | 1 No. |
| 5 | Static Roller | 1 No. |
| 6 | Vehicle Mounted Mechanical Sprayer | 1 No. |
| 7 | Water Lorry | 2 Nos. |

**10.** ஒப்பந்ததாரர்கள் விற்பனை வரி செலுத்தியமைக்கான (Latest Tin Return) சான்று இணைக்கப்பட வேண்டும்.

**11.** மேற்காணும் சான்றுகள் அனைத்தும் Notary Public Officers அல்லது செயற்பொறியாளர் பணியிடத்திற்கு குறையாத உயர் அலுவலர்களால் சான்றொப்பம் பெறப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

**12.** ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டமைக்கு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த ஆவணங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து இட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

செயல் அலுவலர்,
முத்துப்பேட்டைதேர்வுநிலை பேரூராட்சி.
திருவாரூர் மாவட்டம்.

<u>பெறுதல்</u>

2013–14 பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள், முத்துப்பேட்டை பேரூராட்சி.
(அஞ்சலிட்ட சான்று மூலம்)

<u>நகல்:</u>

1. பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
2. திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், திருவாரூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) சென்னை அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
6. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) தஞ்சாவூர் அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
7. உதவிப்பொறியாளர், பேரூராட்சி, முத்துப்பேட்டை .
8. முத்துப்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட அரசு அலுவலகளில் ஒட்டி விளம்பரம் செய்யும் பொருட்டு
9. முத்துப்பேட்டை பேரூராட்சி அலுவலக விளம்பர பலகைக்கு.